# நபிவழியில் நம் தொழுகை

▪இஸ்லாம் என்பது எவ்வித முரண்பாடுகளுமற்ற கொள்கையும், கோட்பாடுமாகும். இந்த இஸ்லாத்தை மனிதன் பரிபூரணமாகப் பின்பற்றி நடப்பதன் மூலம் மட்டுமே இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெற்று அல்லாஹ்வின் திருப்தியை அடைந்து கொள்ளமுடியும்.

ஆனால், இந்தக் கலப்பற்ற இஸ்லாமிய மார்க்கத்தில் இன்று பல கருத்து மோதல்களும் முரண்பாடுகளும் தோன்றி மக்கள் பல கூட்டங்களாகப் பிரிந்து ஒவ்வொரு கூட்டத்தாரும் தாம் இருக்கும் கொள்கையைக் கொண்டே மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றனர்.

மார்க்கத்தின் எந்த அமல்களை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினருக்கு மாற்றமாகச் செயற்படுகின்றனர்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எமக்குக் காட்டித்தந்த அழகிய முன்மாதிரியை மறந்து, இன்று அதிகமான மக்கள் தூய எண்ணத்தோடு தவறான முறையில் தங்கள் இபாதத்துக்களைச் செய்கின்றனர்.

உதாரணமாக, இஸ்லாத்தின் அடிப்படை இபாதத்தான தொழுகையை நிறைவேற்றுவதற்குக் கூட பல்வேறு அமைப்பு முறைகள் காணப்படுகின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால், அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தந்த வழிமுறையைப் (அல்குர்ஆன், அல்ஹதீஸைப்) பின்பற்றாமல், மனிதர்களினால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதாகும். எனவே நபி ﷺ அவர்களின் கட்டளையின்படி,

"...என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள்..." ஸஹீஹுல் புஹாரி : 6008.

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

'வரிசையை ஒழுங்கு படுத்துங்கள்! வரிசைகளை ஒழுங்கு படுத்துவது தொழுகையை நிலை பெறச் செய்வதாகும்.' ஸஹீஹுல் புகாரி : 723.

இதனடிப்படையில், ஒரு மனிதன் தொழுகைக்காகத் தக்பீர் கட்டியது முதல், இறுதியாகச் ஸலாம் கூறும் வரை, அவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதனை தெளிவாக விளக்கினார்கள்.

"நீங்கள் உங்களுடைய ஸப்புகளை சீராக வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நபித்தோழர்கள் தங்களுடைய தோள்களையும் தங்களுடைய பாதங்களையும் இணைத்து வைத்தார்கள்." ஸஹீஹுல் புஹாரி : 725

இந்த ஹதீஸின் அடிப்படையில், ஜமாஅத் தொழுகையின் போது ஸப்புகள் சரியாக அமைக்கப்பட வேண்டும். ஸப்பில் கால்களையும் தோள்களையும் இணைத்து வைக்க வேண்டும். இடைவெளிகள் காணப்படக்கூடாது.

"நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தொழுகையில் இரு கைகளையும் காதுகளின் மேற்புறம் வரை உயர்த்துவார்கள். பிறகு அவர்களின் வலது கையில் இடது கையின் புறப்பக்கத்தின் மீதும் அதன் மணிக்கட்டின் மீது முழங்கைப்பகுதியின் ஆரம்பம் (ஆகிய) அனைத்தும் படும்படியாக இணைத்து வைப்பார்கள்." முஸ்னத் அஹ்மத் : 18870

இந்த ஹதீஸின் அடிப்படையில், தொழுகைக்காகத் தக்பீர் கட்டும் போது, 'நெஞ்சில்தான் தக்பீர் கட்ட வேண்டும்' என்பது மிகத்தெளிவாக விளங்குகிறது.

ஆனால், ஒவ்வொரு பிரிவாரும் பல்வேறு அமைப்புகளில் 'தக்பீர்' கட்டுகின்றனர். சிலர் வயிற்றில் தக்பீர் கட்டுகின்றனர். சிலர் வயிற்றின் அடிப்பகுதியில் தக்பீர் கட்டுகின்றனர். இன்னும் சிலர் இடது கை மணிக்கட்டின் மேல் வலது கை மணிக்கட்டை வைத்து தக்பீர் கட்டுகின்றனர்.

மேலும், அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

"குர்ஆன் ஓதப்படும் போது அதனை நீங்கள் செவிதாழ்த்தி (கவனமாகக்) கேளுங்கள்; அப்பொழுது நிசப்தமாக இருங்கள். (இதனால்) நீங்கள் கிருபை செய்யப்படுவீர்கள்." (அல்குர்ஆன் : 7:204)

அல்லாஹுத்தஆலா அல்குர்ஆன் ஓதப்படும்போது செவிதாழ்த்திக் கேளுங்கள் என்று கூறுகின்றான். ஆனால், இவர்கள் இந்தக் குர்ஆனிய வசனத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு தொழுகை அல்லாத ஏனைய சந்தர்ப்பங்களில் குர்ஆன் ஓதப்படும்போது காது கொடுத்து மௌனமாகக் கேட்கவேண்டும். தொழுகையில் இமாம் குர்ஆனிய சூராக்கள் ஓதும்போது மஃமூம்களும் ஓதலாம் என்று தவறாக விளக்கம் கொடுக்கின்றனர்.

மஃமூன்கள் தொழுகையில் சூரா பாத்திஹா ஓதுவதற்கான சந்தர்ப்பத்தை நபிவழியில் பார்த்தோமேயானால்,

"நபி ﷺ அவர்கள் தொழுகையில் இரண்டு அமைதிகள் காத்தார்கள்.

1) தொழுகையை ஆரம்பித்தபோது ஒரு அமைதியும்,

2) இரண்டாவது சூரா முடிந்து ருகூவுக்கு முன்னால் ஒரு அமைதியும் காத்தார்கள். " முஸ்னத் அஹ்மத் : 20166.

எனவே, அல்லாஹ்வும் அவனது தூதரும் காட்டித்தந்த வழிமுறை என்னவென்றால், இமாம் குர்ஆனிய சூராக்கள் ஓதும்போது மஃமூம்கள் ஓதக்கூடாது; செவிதாழ்த்தி மௌனமாகக் கேட்கவேண்டும். இமாம் இரண்டாவது சூரா ஓதிமுடிந்த பிறகு ருகூவிற்கு செல்லும் முன் அமைதிகாப்பார். அந்தச் சந்தர்ப்பத்தில் மஃமூம்கள் சூரா பாத்திஹாவை ஓதவேண்டும். இதற்கு மாற்றமாகச் செயற்படக் கூடாது.

இதற்கு அடுத்தபடியாக நபி ﷺ அவர்கள் தொழுகையில் பிரார்த்தனைக்குரிய சந்தர்ப்பம் வரும்போது தனது சுட்டுவிரலை அசைப்பார்கள். அதாவது, இரு ஸஜ்தாவுக்கும் இடையிலான நடுஇருப்பிலும் மற்றும் இரண்டு ரக்அத்துகள் முடிந்து உட்காரும் சந்தர்ப்பத்திலும், இன்னும் இறுதி அத்தஹிய்யாத்தில் பிரார்த்தனைக்குரிய சந்தர்ப்பம் வரும்போது 'இஷாரா' (விரலசைத்தல்) செய்வார்கள்.

"நபி ﷺ அவர்கள் தங்களுடைய சுட்டுவிரலை உயர்த்துவார்கள். பிறகு அதனை அசைப்பதனை நான் கண்டேன். அதனைக் கொண்டு அவர்கள் 'துஆச்' செய்வார்கள். " முஸ்னத் அஹ்மத் : 18770

இன்று அதிகமானோர், நபி ﷺ அவர்கள் தொழுகையில் மிக நீண்ட நேரமாக இருந்தார்கள். இதனைக்கண்ட ஸஹாபாக்கள் நபியவர்கள் மரணித்துவிட்டார்களோ என்று கதைத்தார்கள். இதனைக் கேட்ட நபி ﷺ அவர்கள் தனது சுட்டுவிரலை அசைத்துக் காட்டினார்கள் என்று மார்க்கத்தில் கூறப்படாத விடயங்களைக் கூறுகின்றனர் - இந்த விடயம் தவறானதொன்றாகும்.

எனவே, அல்லாஹ் எமக்கு அருளிய அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆகிய வேதங்களின் வழியாகத் தேடி ஆராய்ந்து, நபி ﷺ அவர்கள் காட்டித்தந்த வழியில் தொழுது பரிபூரண பலன்களை அடைந்து கொள்வோம் இன்ஷா அல்லாஹ்.

ஆக்கம் : சகோதரர் A A M. அஸ்ஜத், நாகவில்லு.

Nov 2023